**மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை**

அனுப்புநர்:
முதல்வர்,
அரசு மருத்துவக்கல்லூரி,
அரியலூர்.

பெறுநர்:
மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர் - 621 704

**ந.க.எண்.4735/மக5/2024, நாள்: 30.05.2025**

பொருள்: மருத்துவம் சார்ந்த கல்வி – அரசு மருத்துவக் கல்லூரி, அரியலூர் - 2025 ஆம் கல்வியாண்டு - Home based Elderly care Support Assistant – மூன்று மாத சான்றிதழ் படிப்பு தொடர்பாக விண்ணப்பங்கள் - NIC மூலம் தகவல் தெரிவிக்க கோரியது – தொடர்பாக.

பார்வை: 1) அரசாணை எண் G.O.(Ms) No.284, மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை (PME1), நாள்:27.09.2024.
2) ந.க.எண்.264209/PME/3/2024, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், சென்னை-10, நாள்:27.09.2024, 28.09.2024.

*****

பார்வையில் கண்ட கடிதங்களின் படி அரசு மருத்துவக்கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டு (2025) முதல் Home based Elderly care Support Assistant என்ற மூன்று மாத கால சான்றிதழ் படிப்பு துவக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சான்றிதழ் படிப்பில் சேர்ந்து பயில விரும்பும் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட அட்டவணைப்படி தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பொருளடக்கம் |
|---|---|
| 1 | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| 2 | மாணவ/மாணவியர் அரியலூர் மாவட்டத்தை சார்ந்தவராக மட்டுமே இருக்க வேண்டும். |
| 3 | படிப்பிற்கான காலம் 3 மாதங்கள் மட்டும். (கட்டணம் இல்லை) |
| 4 | வயது வரம்பு –<br>குறைந்த பட்சம் 17, OC/BC/MBC&DNC/BCM அதிக பட்சம் 32<br>SC/SCA/ST - அதிக பட்சம் 37 |
| 5 | விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் நாள்: 09.06.2025 மு.ப 10 மணி முதல் |
| 6 | விண்ணப்பிக்க கடைசி நாள்: 23.06.2025 பி.ப 5.45 மணி முடிய |
| 7 | இடம்: அரசு மருத்துவக்கல்லூரி, அரியலூர். |
| 8 | தகுதி வாய்ந்த நபர்கள் உரிய காலத்திற்குள் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |
| 9 | காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது. |
| 10 | மாணவர் தேர்வானது முதல்வரின் ஆணைக்குட்பட்டது. |

மேற்கண்ட அட்டவணையில் கண்ட விவரங்களை, **ariyalur.nic.in** வெப்சைட் மூலம் தகவல் தெரிவித்திட ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மாணவர் நலனை முன்னிட்டு மேற்காணும் செய்தியினை தமிழ், ஆங்கில நாளிதழ்களிலும் வெளியிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இணைப்பு: 1) பார்வையில் காணும் அரசாணை நகல்
2) நாளிதழ் செய்தி அறிவிப்பு

முத்துக்கிருஷ்ணன் 30/5/25
முதல்வர்
அரசு மருத்துவக்கல்லூரி,
அரியலூர்.

30/05/25